



சென்னை பல்கலைக் கருத்தரங்கில் சுயமரியாதை நூற்றாண்டு விழாவில் கருத்தரங்கக் குறிப்புகள், ஆய்வுக் கட்டுரைகள், குறிப்பிட்ட கட்டுரை ஆசிரியர்கள் ஆகிய சிறு நூலை தஞ்சாவூர் வல்லம் பெரியார் மணியம்மை பல்கலைக் கழக (நிகர்நிலை) வேந்தர் ஆசிரியர் கி. வீரமணி வெளியிட, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். உடன் பல்கலை துணைவேந்தர் ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர் முனைவர் எல்.ஆர்ம்ஸ்ட்ராங், அண்ணா மய்யத்தின் தலைவர் முனைவர் கலைச்செல்வி மற்றும் முனைவர் கோ. ஒளிவண்ணன் ஆகியோர் பங்கேற்றனர். (சென்னை பல்கலைக் கழகம், 11.9.2025)

### பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு

# திருச்சி தெற்கு மாவட்டம் முழுவதும் கழகக் கொடியேற்று விழா - வாக்குச் சாவடிகளில் உறுதிமொழி முன்மொழிவு நிகழ்வு!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!

சென்னை, செப். 14–

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 15.09.2025 பேரறிஞர் அண்ணா பிறந்தநாளை, முன்னிட்டு திருச்சி சிந்தாமணி அண்ணா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு காலை – 08.00 மணிக்கு கழக நிர்வாகிகளுடன் சென்று மாலை அணிவிக்க உள்ளோம். அதனைத் தொடர்ந்து திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் உள்ள கொடிக்கம்பங்களில் ஆங்காங்கே உள்ள கழக முன்னோடிகளுடன் இணைந்து தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு அந்தஸ்தில் உள்ள நிர்வாகிகள் கழகக் கொடியேற்றி சிறப்பிப்பார்கள். எனவே பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள் நிகழ்ச்சிகளை சிறப்பாக ஏற்பாடு செய்திட அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். அதனைத் தொடர்ந்து தங்கள் பகுதியில் உள்ள அனைத்து வாக்குசாவடிகளிலும் “தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்” என்ற தலைப்பில் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்துள்ள உறுப்பினர்களை ஒன்றிணைத்து உறுதிமொழி ஏற்க வேண்டும்.

குறிப்பு: கீழ்க்கண்டபடி பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் வழங்கிய கொடிக்கம்பங்களின் எண்ணிக்கையில் குறையாமல் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு அந்தஸ்தில் உள்ள நிர்வாகிகள் கொடியேற்றிட ஏற்பாடு செய்திட வேண்டும். தலைமைச் செயற்குழு, பொதுக்குழு அந்தஸ்தில் உள்ள நிர்வாகிகள் கொடிக்கம்பங்களின் எண்ணிக்கையை சரி பார்த்து கொடியினை ஏற்றிட வேண்டும். மேலும் கழக நிர்வாகிகள் சிந்தாமணியில் உள்ள அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து பின்பு தங்கள் பகுதிகளுக்கு சென்று கழகக் கொடியேற்றி தலைமை கழகத்தில் இருந்து அறிவித்தபடி உறுதிமொழி ஏற்க வேண்டும்.



உறுதிமொழி ஏற்கும் போது ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் அமைந்துள்ள கொடிக்கம்பங்களின் முன்பாக நின்று ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பில் இணைந்த குடும்பங்களை அழைத்து உறுதிமொழி ஏற்க வேண்டும். ”என் வாக்குச்சாவடி, வலிமையான வாக்குச்சாவடி என்பதை உணர்த்திடும் வகையில் அந்தந்த வாக்குசாவடிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணியினர், BLA2, BDA, BLC, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் என குறைந்தபட்சம் 100 பேர்களாவது ஒரு வாக்குச்சாவடியில் கலந்து கொள்ள வேண்டும்.

பகுதி, ஒன்றியம், நகரம் , பேரூர் கழகம், உறுதிமொழி எடுக்கும் இடங்களின் எண்ணிக்கை, உறுதிமொழி எடுக்க மாவட்ட கழகத்தால் அனுப்பப்படும் பிரதிநிதிகள் 1. மலைக்கோட்டை பகுதி, ஆர்.மோகன் பகுதி செயலாளர், எண்ணிக்கை 58, ஆர்.மணிமேகலை, தென்னரசு (மே.க.கோட்டை), ப.சிந்துஜா, எம்.ஆர்.முத்துதீபக், ஏ.தினகரன், 2. மார்க்கெட் பகுதி, RG.பாபு பகுதி செயலாளர், எண்ணிக்கை 50, யு.இராஜேஸ்வரன், ஜெ.ஜெ. மகேஸ், ஏ. பி. ரகுநாதன், சௌதி சவுகத் (தொகுதி அமைப்பாளர்), 3. பாலக்கரை பகுதி, T.P.S.S.ராஜ் முஹம்மது, பகுதி செயலாளர், எண்ணிக்கை 53, லீலாவேலு, (வக்கில்) லிங்கம், கே.விஜயகோபால், சி.எம். மெய்யப்பன், 4.கலைஞர் நகர் பகுதி, G.மணிவேல் பகுதி செயலாளர், எண்ணிக்கை 52, வண்ணை அரங்கநாதன், பி.ஏ.நூர்கான், என். செந்தமிழ்செல்வன், கோவிந்தராஜ் (மாவட்ட பிரதிநிதி),எஸ்.இப்ராஹீம், 5. அரியமங்கலம் பகுதி, A.M.G. விஜயகுமார் பகுதிச் செயலாளர், எண்ணிக்கை 41, ஆறு.சந்திரமோகன்,கே.ஏ.வி.தினகரன், அப்துல் குத்துஸ், கே.லோகநாதன், 6. பொன்மலை பகுதி, E.M.தர்மராஜ், பகுதி செயலாளர், எண்ணிக்கை 54, என்.தமிழச்செல்வன், வேல்முருகன், ஜி.ரமேஷ், எம்.பன்னீர்செல்வன், டி.செந்தில், 7. காட்டூர் பகுதி, O.நீலமேகம் பகுதிச் செயலாளர், எண்ணிக்கை 40, ந.செந்தில், பொன்செல்லையா, S. சாந்தகுமாரி சாலமன், ஜெ. அன்பழகன், எம். ஜியாவுதீன், 8. திருவெறும்பூர் பகுதி, S.சிவக்குமார் பகுதிச் செயலாளர், எண்ணிக்கை 49,அ.த.த.செங்குட்டுவன், ஏ.எம்.அசாருதீன், பி.எம். கே.குறிஞ்சி மன்னன், கலைவாணி ரமேஷ்,

09. திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம், C.கங்காதரன் ஒன்றியச் செயலாளர், எண்ணிக்கை 63, கே.கே.கே.கார்த்திக், ஏ.ஜெகதீசன், கே.கயல்விழி, முத்துசாமி, 10. திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம், K.S.M.கருணாநிதி ஒன்றியச் செயலாளர், எண்ணிக்கை 43, கே.என். சேகரன், ந.ப.மனோகரன், முத்து வெங்கடேஷ், கோவிந்தராஜ், 11. மணப்பாறை ஒன்றியம், C.ராமசாமி ஒன்றிய செயலாளர், எண்ணிக்கை 72, பன்னப்பட்டி கோவிந்தராஜ், வெங்கடேஸ்வரன், அமிர்தவள்ளி, பெரியண்ணன், 12. வையம்பட்டி வடக்கு ஒன்றியம், R.சீரங்கன் ஒன்றியச் செயலாளர், எண்ணிக்கை 49, எம்.மாரியப்பன், பி.அருள் சுந்தராஜன், கந்தசாமி, குணசீலன், 13. வையம்பட்டி தெற்கு ஒன்றியம், V.A.ராஜேந்திரன் ஒன்றியச் செயலாளர், எண்ணிக்கை 44, பி.எம். சாபியுல்லா, டால்பின் சாலமன், சூரியா சுப்பிரமணி, லோகநாதன், 14. மருங்காபுரி வடக்கு ஒன்றியம், C.செல்வராஜ் ஒன்றிய செயலாளர், எண்ணிக்கை 38, டி.திவ்யா, ராஜா பொன்னுசாமி, சாமிக்கண்ணு, சிவக்குமார், 15. மருங்காபுரி தெற்கு ஒன்றியம், C.சின்னடைக்கன் ஒன்றியச் செயலாளர், எண்ணிக்கை 32, எஸ்.பன்னீர்செல்வம், இ.பொன்னார்டு, என்.பிரகாஷ், சி.கணேசன், 16. மருங்காபுரி மத்திய ஒன்றியம், M.பழனியாண்டி ஒன்றியச் செயலாளர், எண்ணிக்கை 46, இரா.குணசேகரன், ஆர்.பி.சுந்தரராசன், இளையராஜா, மணிகண்டன், 17. துவாக்குடி நகரம், E.காயாம்பு நகர செயலாளர், எண்ணிக்கை 32, இரா.மூக்கன், தனசேகரன், லலிதா தேவி, ஜோசப்நெல்சன், 18. மணப்பாறை நகரம், மு.ம.செல்வம் நகர செயலாளர், எண்ணிக்கை 33, வி.பொற்கொடி, பி.கிருஷ்ணா கோபால், ஆர்.வி.எஸ்.மணி, என்.சுரேஷ்பாபு, 19.கூத்தைப்பார் பேரூர் எம்.ஆர்.டி.பி.கே.தங்கவேலு, பேரூர் செயலாளர், எண்ணிக்கை 12, D.ஜெயநிர்மலா, கே.கே.செல்வராஜ், ரம்யாபேகம், கணேஷ்குமார், பழனியாண்டி. 20. பொன்னம்பட்டி பேரூர் K.A.நாகராஜ் பேரூர் செயலாளர், எண்ணிக்கை 10, கவிஞர் சல்மா, பி.விஷ்ணுவரதன், ஜெயாசித்ரா, நவநீத கிருஷ்ணன்,

இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதி, ஒன்றிய, நகர பேரூர், வட்ட, வார்டு கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட, மாநகர சார்பு அணிகளின் தலைவர், துணை தலைவர், அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து பிரதிநிதிகள், BLA2 BDA, BLC, ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் மற்றும் கழக தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேட்டுக் கொண்டுள்ளார்.

### தி.மு.க. தொண்டர் அணி! கோவை வடக்கு, தெற்கு, கோவை மாநகர் மாவட்டம்,

# நீலகிரி, திருப்பூர் கிழக்கு, மத்திய, வடக்கு, தெற்கு மாவட்ட நிர்வாகிகள் கூட்டம்!

## தொண்டர் அணி செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் அறிவிப்பு!

*சென்னை, செப். 14-*

*கழக தொண்டர் அணி செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-*

*கோவை வடக்கு, தெற்கு,கோவை மாநகர மாவட்டம், நீலகிரி மாவட்டம், திருப்பூர் கிழக்கு, மத்திய, வடக்கு, தெற்கு மாவட்டங்கள் உள்ளடக்கிய கழகத் தொண்டர் அணி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் வருகின்ற 16.09.2025 செவ்வாய்க் கிழமையன்று காலை 11.30 மணியளவில் கோவை மாவட்டத் தி.மு.க. அலுவலகம்,710. கிராஸ் கட்ரோடு, வட கோவை, கோவை12,என்னும் முகவரியில் எனது தலைமையில் நடைபெற உள்ளது.*

*அதுபோது மேற்கண்ட மாவட்டங்களுக்குட்பட்ட கழகத் தொண்டர் அணி மாவட்டத் தலைவர், துணைத்தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*வருகையின்போது நிகழ்ச்சிக் குறிப்பேடு(மினிட் புக்)கண்டிப்பாக கொண்டு வரவும்.*

*பொருள்: கழக ஆக்கப்பணிகள் தொடர்பாக.*

*இவ்வாறு தி.மு. கழக மாநிலத்தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம், எடப்பாடியில் உள்ள ஸ்ரீ நடராஜா திருமண மண்டபத்தில் சேலம் மேற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் ப.தங்கமுத்து தலைமையில், முன்னாள் அமைச்சர், சேலம் நாடாளுமன்ற உறுப்பினரும், சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான டி.எம்.செல்வகணபதி சிறப்புரையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் சேலம் மேற்கு மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர்களால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

